TAMIL NADU LEGISLATIVE ... MADRAS
5 - SEP 1981

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 பிப்ரவரி 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.''

பொருத்தமான நல்ல சொற்களைப் பயன்படுத்துவதால் நன்மையும், தவறான சொற்களைப் பயன்படுத்துவதால் தீமையும் உண்டாகும். எனவே நாம் சொல்லுகின்ற சொற்களில் தவறு நேராமல் ஒருவர் காத்துக்கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 141—ம், 142-ம் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

பகுதி நேர ஆசிரியர் பதவிகள்.

*வினா எண். 143: திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பகுதிநேர ஆசிரியர்கள் பதவிகளை முழு நேர ஆசிரியர் பதவிகளாக மாற்றுவது பற்றி என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: பகுதி நேர ஆசிரியர்கள் பதவிகளை முழு நேர ஆசிரியர் பதவிகளாக மாற்றுவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

[1981 பிப்ரவரி 3

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது முழுநேர ஆசிரியர்களாக்குகின்ற குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் கைத்தொழில் ஆசிரியர்கள், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஒரே ஆசிரியர் மூன்று பள்ளிகளுக்குச் செல்லுகின்ற நிலையும் 400 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்ற நிலையும் இருக்கின்ற காரணத்தினாலே ஆசிரியர் பெருமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள்; ஒரு ஆசிரியர் 12 மைல்களுக்கு மேல் நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. நிரந்தர ஆசிரியர்கள் என்ற சலுகை இருந்தால் அவர்களுக்கு இந்தக் குறை நீங்கும் என்பதாலே அவர்கள் நன்மையைக் கருதி அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, அவர்களை நிரந்தரமாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பகுதி நேர ஆசிரியர்கள் என்ற கேள்வி பொதுவாக இருப்பதால், இதிலே கல்லூரி ஆசிரியர்கள் கூட இருந்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் தேவையாக இருப்பதால் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது குறிப்பாக கைத்தொழில் ஆசிரியர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, கைத்தொழில் ஆசிரியர்களைப் பற்றி பரிசீலிக்கும் என்று சொன்ன அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்து, 400 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று சொல்லுகின்ற அந்த எல்லைக் கோட்டை அப்புறப்படுத்தினால் எல்லா ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படுவதுடன் மேலும் பல ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்; ஆகையினாலே அந்த எல்லைக்கோட்டை அரசு மாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்தக் கைத்தொழில் ஆசிரியர்கள் பிரச்சனையை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு இரா. சுருப்பையா: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் பட்டப்படிப்பு படித்த ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்விக்காக பகுதி நேர ஆசிரியர்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அது தேவை என்று கருதித் தான் வைத்திருக்கிறோம். முழு நேர ஆசிரியர்களைப்

போடுகின்ற சூழ்நிலையில் போடுவோம் என்றாலும் பகுதி நேர ஆசிரியர்கள் கண்டிப்பாகத் தேவைப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பாங்கிங் பாடப் பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு முழு நேர ஆசிரியரை நியமிப்பதை விட அந்தப் பகுதியிலே இருக்கிற பாங்கிலே உத்தியோகம் பார்க்கின்ற அதிகாரி ஒருவர் வந்து சொல்லித் தருகின்ற நிலை இருந்தால் அந்தப் படிப்பு தரமானதாக இருக்கும்; காலத்திற்கு ஏற்றதாக இருக்கும். ஆகவே, அந்தமாதிரி பாடத்திற்கு பகுதி நேர ஆசிரியர் தேவை என்று வைத்திருக்கிறோம்.

திரு .தி. க. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் எந்தெந்த தொழில் படிப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் கல்வியைப் பொருத்த மட்டில் இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் என்ற ஒரு பிரிவை வைத்து நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். பல இடங்களிலே இது நல்ல பலனைத் தந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் அந்தத் தொழில் பாடங்களை நாம் அந்த அடிப்படையில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அளவிலே விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போளூர் பகுதியில் பொறியியல் தொழிற்கல்விப் பள்ளி.

*வினா எண். 144 திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் பகுதியில் பொறியியல் தொழிற்கல்வி பள்ளி (பாலிடெக்னிக்) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக, எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செ. அரங்கநாயகம்.— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, போளூர், ஆரணி, கலசப்பாக்கம் போன்ற ஊர்களிலிருந்து ஏறக்குறைய 35 மைல்களுக்கு எந்தவிதமான கல்லூரிகளோ தொழில் பயிற்சி நிலையங்களோ இல்லை. ஆகவே அது குறித்து இந்த அரசு பரிசீலிக்க முன்வருமா?